பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆவணி மீ 07 உ. வியாழக்கிழமை (23 08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 02 கதிர்: 173

# காரைநகரில் இருந்து ராணுவம் முன்னேற்றம்

## வீடுகள் தீக்கிரை; மக்கள் அகதிகளாயினர்

மூளாய், ஆக. 23

காரைநகர் கடற்படை முகாமில் குவிக்கப்பட்ட இராணுவப் படையினர் நேற்றுக் காலை குடிமனைப் பகுதியை நோக்கி — சுமார் ஒரு மைல் தூரம் — முன்னேறியிருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினர் முன்னேறிய பகுதிகளில் பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருப்பதாகவும், சிலர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

படையினர் முன்னேற்றத்தை அடுத்து மக்கள் அங்கிருந்து வெளியேறி, அகதிகளாக பிற இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில்ஐந்துக்கும் அதிகமான ஹெலிக்கொப்டர்கள் இராணுவத்தினரை மாறி மாறி ஏற்றிவந்து காரைநகர் கடற்படை முகாமில் குவித்ததாக அறியவருகிறது.

இராணுவத்தினர் காரைநகர் கடற்படை முகாமில் தரையிறக்கப்பட்டனரா அல்லது — நயினாதீவு கடற்படைமுகாமில் தரையிறக்கப்பட்டு கடற்படைப் படகுகள்மூலம் காரைநகர் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டார்களா என்பதை உறுதிப் படுத்த முடியவில்லை.

விடியும்வேளையில் ஹெலிக்கொப்டர்களிலிருந்து காரை

[3ஆம் பக்கம் பார்க்க]

### ஊர்காவற்றுறையில்: இரு போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 23

ஊர்காவற்றுறையில் நேற்று இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் வீரமரணமடைந்தனர்.

நிசாந்தன், காந்தன் ஆகியோரே அந்தப் போராளிகள் ஆவர். (ஒ-5)

## ஹெலி நேற்று வீசிய ஊரடங்குப் பிரசுரம்

யாழ்ப்பாணம், ஆக. 23

ஊரடங்கு உடனடியாக நடைமுறைக்கு வருவதாக ஆயுதப்படையினர் நேற்றுக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் துண்டுப் பிரசுரங்களைப் போட்டனர்.

தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி, சித்தன் கேணி, காரைநகர் ஆகிய பகுதிகளில் ஒரேமாதிரியான இந்தத் துண்டுப்பிரசுரம் நேற்றுக் காலை ஹெலியிலிருந்து போடப்பட்டதாக எமது செய்தியாளர்கள் அறிவிக்கிறார்கள்.

இதேபோல மற்றும் பல பகுதிகளிலும் துண்டுப் பிரசுரம் போடப்பட்டதாக அறியப்படுகிறது. ஆனால் ஊர்ஜிதமாகவில்லை.

சம்பந்தப்பட்ட துண்டுப் பிரசுரம் ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிடப்பட்டிருந்தது. அதன் மொழிபெயர்ப்பு

[4ஆம் பக்கம் பார்க்க]

## பொம்மர்கள், ஹெலிகள் நேற்று மக்களை விரட்டித் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஆக. 23

குடாநாட்டில் நேற்று பல இடங்களிலும் — வீதிகளில் சென்றவர்கள் மீது பொம்மர்கள், ஹெலிகள் வேட்டுக்களைத் தீர்த்தன.

வானில் பறந்த பொம்மர்களும், ஹெலிகளும் வீதிகளில் எவரும் செல்வதைக் கண்டால் திடீரென கீழே குத்தி இறங்கி வந்து தாக்குதல் நடத்தின.

பொம்மர்களே அதிகளவில் பதிந்து வந்து வேட்டுக்களைத் தீர்த்தன.

நேற்று யாழ். நகரம் உட்பட குடாநாட்டின் பல பகுதிகள் மீதும் விடாது மாறி, மாறி வட்டமிட்டுத் திரிந்தபொம்மர்களும், ஹெலிகளும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் அல்லோலகல்லோலத்தை ஏற்படுத்தின.

அரச படைகளின் ஊரடங்கு உத்தரவை சன் காணிப்பதற்கு வீதிகளில் ரோந்து செல்ல முடியாத படைகள், வானத்தில் - உயரத்தில் பறந்தவாறு ரோந்து புரிந்து வீதிகளில் சென்றோர் மீது தாக்குதல்களை நடத்தின.

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை, அரசடி வீதி, திருநெல்வேலி, கோண்டாவில், இருபாலை, நல்லூர், கோப்பாய், சங்கானை, சித்தன் கேணி, சுழிபுரம், மூளாய்,

[4ஆம் பக்கம் பார்க்க]

## 24 தமிழர்கள் படுகொலை

யாழ்ப்பாணம், ஆக. 23

திருகோணமலையில், அலெஸ் தோட்ட இராணுவ முகாமில் வைத்து 24 அப்பாவித் தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஞாயிறன்று நடந்த இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்கள் பற்றிய மேலதிக விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை.

### முல்லைத்தீவில் சிப்பாய் பலி

முல்லைத்தீவு இராணுவ முகாம் நோக்கி நேற்று விடுதலைப் புலிகள் குறி பார்த்துச் (சினைப்பர்) தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

## கோட்டையில் பொலீஸ்காரர் உயிரிழப்பு

கொழும்பு, ஆக. 23

யாழ். கோட்டை முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய தாக்குதலில் ஒரு பொலீஸ்காரர் கொல்லப்பட்டார் என்றும் — மற்றும் இருவர் காயமடைந்தனர் என்றும் ஏஜன்சிச்செய்திகள் தெரிவித்தன. (ஒ-ஏ)

## கொழும்புத்துறையில்நேற்று 2வயது சிசு உட்பட 3பேர்பலி

யாழ்ப்பாணம், ஆக. 23

கொழும்புத்துறையில் தற்காலிகமாக இயங்கும் சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை 10-30 மணியளவில் பொம்மர் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டது. குண்டு வீச்சில் 2வயதுக் குழந்தை உட்பட மூவர் பலியானார்கள். மேலும் இருவர் காயமடைந்தனர்.

அதேவேளை இப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தொழிலாளர்களை நோக்கியும் ஹெலி ஒன்று சரமாரியாகச் சுட்டது.

மீனவர்கள் படகில் இருந்து கடலில் பாய்ந்து நீந்திக்கரை சேர்ந்துவிட்டனர். (ஒ)

## பொம்மர் குண்டுவீச்சில் சித்தன்கேணியில் ஒருவர் பலி

சித்தன்கேணி சிவன்கோவிலுக்குச்சமீபமாக நேற்றுநடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

அப்பகுதியில் நின்ற ஒரு மினிபஸ்ஸை நோக்கி குண்டு வீசப்பட்டதாகவும், அதுகுறி தவறி ஒரு வீட்டின்மேல் விழுந்து வெடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டுவீச்சில் வீடு பலத்த சேதமுற்றது. வீட்டிலிருந்த ஆறுமுகம் என்பவரே உடல் சிதறி உயிரிழந்தார். (ஒ)

## மூளாய் ஆஸ்பத்திரி மீது பொம்மர் தாக்குதல்கள்

மூளாய், ஆக. 23

மூளாய் ஆஸ்பத்திரி மீது நேற்று இரண்டு தடவைகள் பொம்மரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

நண்பகல் 11 மணியளவில் ஆஸ்பத்திரி சுற்றாடலில் மூன்று றொக்கட்குண்டுகள் வீசப்பட்டன. இந்தத் தாக்குதலில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இரண்டு நோயாளர் உட்பட சிலர் காயமுற்றனர்.

பின்னர் மாலை 4 மணியளவிலும் இப்பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவங்களை அடுத்து மூளாய் ஆஸ்பத்திரி நேற்று இழுத்து மூடப்பட்டது. [உ]

## திருநெல்வேலிப் பகுதியில் கடைகள், வீடுகள் சேதம்

திருநெல்வேலி, ஆக. 23

திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகம், கிராமிய வங்கி ஆகியவை உட்பட ஏழு கடைகளும், அப்பகுதியிலிருந்த ஒன்பது வீடுகளும் சேதமடைந்தன. மூவர் காயமுற்றனர்.

நல்லூர் ப. நோ. கூ. சங்க காரியாலய கிளை முகாமையாளர் எஸ். கனகசபாபதி (வயது 50), தலைமையக எழுதுவினைஞர் கே. பாலச்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கப்பல் திரும்பியது; பொருள்களை இறக்காமல்!

– பருத்தித்துறைச் செய்தியாளர்; பா. ரகுநாதன் –

பருத்தித்துறை, ஆக. 23

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களுடன் நேற்று முன்தினம் (செவ்வாய்) பருத்தித்துறைக்கு வந்த ''லங்கா சிறி'' என்ற கப்பல் பொருள்களை இறக்காமலேயே நேற்றுத் திரும்பிச் சென்று விட்டது.

நேற்று ஹெலிக்கொப்டர் மூலம் ஊரடங்கு உத்தரவு சம்பந்தமான துண்டுப் பிரசுரம் போடப்பட்டதை அடுத்து, பணியாளர்கள் கப்பலில் இருந்து பொருள்களை

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமேஸ்வரத்தில் எரிபொருள் இப்போது பங்கீட்டு முறையில்

## இலங்கைக்குக் கடத்தப்படுவதன் எதிரொலி

— இராமேஸ்வரத்திலிருந்து உதயன் விசேட செய்தியாளர் —

இராமேஸ்வரம், ஆக. 23

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை (20-8-90) முதல் டீசல் பங்கீட்டு அடிப்படையில் விநியோகிக்கப்படுகிறது.

வாகனங்களில் உள்ள எரிபொருள் தாங்கிகளுக்குள் நேராக டீசலை ஊற்ற ('பம்ப்' செய்ய) வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பெற்றோல் நிலையங்களை மாவட்ட நிர்வாகம் இவ்வாறு பணித்துள்ளது.

கைகளில் எடுத்து வரப்படும் கொள்கலன்களுக்குள் (''கான்'' களுக்குள்) டீசலை நேரடியாக ஊற்றக்கூடாது என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

பங்கீட்டு அட்டைகளுக்கு தாசில்தார் மூலமாக டீசல் மட்டுமே விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லொறிகள், பஸ்களுக்கு ஒரு முறை 100 லீற்றரும் — வான்கள், டிராக்டர்களுக்கு 50 லீற்றரும் — டாக்ஸிகளுக்கு 30 லீற்றரும் விநியோகிக்கப்படும்.

வளைகுடாப் பிரச்சினையாலும், இலங்கைப் படகுகள் வருகையினாலும் மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் கடும் தட்டுப்பாடு நிலவி வருவதைத் தொடர்ந்தே இந்தப் பங்கீட்டு முறை கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இராமேஸ்வரம் வழியாக சுமார் 5 ஆயிரம் லீற்றர் டீசல், சுமார் 1,000 லீற்றர் பெற்றோல், 1,000 லீற்றர் மண்ணெண்ணெய் தினமும் இலங்கைக்கு கடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதனால் இங்கு எரிபொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன. முன்னர் வெளிச்சந்தையில் 4 ரூபா 80 பைசா விற்ற டீசல் இப்போது 11 ரூபாவுக்கும், 11 ரூபா 20 பைசா விற்ற பெற்றோல் 25 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன.

இலங்கையிலிருந்து வரும் படகுகளுக்கு விற்பதற்கென மருத்துவமனை ஒன்றில் பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் பதினைந்துபீப்பா டீசல் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மீன் பிடிக்கச் செல்லும் படகுகளுக்கும் டீசல் பங்கீட்டு முறையிலேயே வழங்கப்படுகின்றது. (அ-எ)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பனந்திராந்தி, நிலை சுதவு யன்னல், அஸ்பஸ்ராஸ் சீற், கடை அலுமாரி, விறாக்கி, சோக்கேஸ், இரும்பு மேசை, கதிரை, மின்விசிறி, றேடியோ, ரீவி. டெக், வீட்டுப்பாவனைப் பொருள்கள் மலிவு விலையில் கிடைக்கும். தனேந்திரன், காங்கேசன்துறை வீதி, 3 ஆம் கட்டையடி, தாவடி. (13912)

10 x 8 இரும்பு சுருக்கு கதவு கல்வனைஸ் தகடு போட்டது புதியது அவ்ரி மேடைத் தராசு விற்பனைக்கு உண்டு. க. குணரெத்தினம், 7, கைலாசபிள்ளையார் கோயில்பின் வீதி, நல்லூர். (13913)

### தவறிவிட்டது

கந்தையா மாணிக்கவாசகர், மாணிக்கவாசகர் பராசக்தி ஆகிய இருவர் அடையாள அட்டையும் சயிக்கிள் திறப்பும் முருகன் கோவிலில் தவறி விட்டது, கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13910)

## கல்வி அமைச்சின் சுற்றறிக்கை

கொழும்பு, ஆக. 23

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் அனைத்தும் தமிழ் மொழியில் கட்டாயமாக மொழிபெயர்க்கப்பட்டு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இப்படி கல்வி, உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி உத்தரவிட்டிருக்கிறார். (இ - எ)


## 'M' THREE TRAVELS

1. எம்மிடம் கடவுச்சீட்டுக்கள் (Passport) தந்தவர்கள் தயவு செய்து எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.
2. முன்பு பத்திரிகையில் பெயர் போட்டு எம்மை சந்திக்க சொன்னவர்களும் மீண்டும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
3. நீங்கள் ஏராதபட்சத்தில் உங்களுடைய கடவுச்சீட்டு உட்பட சகல பத்திரங்களுக்கும் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல இதனால் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

'M' Three Travels

20, கந்தப்புராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

கூட்டுறவுஆளர் வீதி,
அளவெட்டி வடக்கு.
(விங் கொம்பனி அருகாமை)

[சி-5175]


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

தோற்றம்: 09 — 09 — 1909
மறைவு: 14 — 09 — 1988

திதி: 23 — 08 — 1990

அம்மா; நீங்கள் எம்மையும் எம் ஈழத்து மண்ணையும் பிரிந்து ஆண்டுகள் இரண்டு கடந்தாலும் உங்கள் நினைவு எம் உள்ளங்களில் என்றும் நிறைந்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம். [14044]

## அகதிகளுக்கு பொருள்கள்

யாழ்ப்பாணம், ஆக 23

தீவுப் பகுதி பயிலுநர் ஆசிரியர் சங்கத்தினால் அகதிகளுக்காகப் பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பொருள்கள், அகதிகளுக்கு வழங்கப்படுவதற்காகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

## இரத்த தானம்

அவசர தேவைகளுக்கு இரத்ததானம் வழங்க சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு பயிலுநர் ஆசிரியர் சங்கம் முன்வந்துள்ளது.

அதன் தலைவர் திரு. ஆர். முகுந்தன் இதனைத் தெரிவித்தார். (இ - 90)

## சிறுவர் பாடசாலை

மானிப்பாய், ஆக. 23

மானிப்பாய்: கிராம மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரால் சுட்டுடைக் கிராமத்தில் சிறுவர் பாடசாலை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். பி. ஜெயக்குமார் பாடசாலையை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார். திருமதி. ப. பஞ்சலிங்கம் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது. (இ - 90)

## கடிதம் தேவையில்லை

யாழ்ப்பாணம், ஆக. 23

யு. ரி. ஐ. நிறுவனத்தின் நிதிவைப்பாளர்களில், 31-12-1989 க்கு முன் முதிர்ச்சியடைந்த கணக்குகளின் சார்பில், கொழும்பிலிருந்து கமதம் வராவிடினும், யாழ்ப்பாணம் பலாலி வீதியில் உள்ள கிளையில் உறுதிப் படிவங்களை நிரப்பிக் கையளிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

தபாற் சேவையில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதால் வாடிக்கையாளர் நலன் கருதிகொழும்புக்கு கடிதம் இல்லாமலேயே உறுதிப் படிவங்களை ஏற்றுக் [illegible] தெரிவிக்கப்பட்டது. (அ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



திரு. க. கணபதிப்பிள்ளை
(றெயில்வே கார்ட்டர்)

விண்ணுலகம்: 17 - 07 - 1927
மண்ணுலகம்: 24 - 07 - 1990

எமக்கு ஒளி விளக்காகத் திகழ்ந்த தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம் 23 - 08 - 1990 அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியையிலும் மதிய உணவிலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

K. K. S. றோட்,
மாவிட்டபுரம். [14070]

+



இறை இரக்கத்தின் பக்தி
யேசுவே,
நான் உம்மில்
நம்பிக்கை
வைக்கிறேன்.

## 85 ஆவது பிறந்த தினத்தின் திருப்பலி நினைவு



அருட் செல்வி
பௌஸ்ரீனா கெலன் கௌவ்லஸ்கா

தோற்றம்: 25 - 08 - 1905
மறைவு: 05 - 10 - 1938

இறை இரக்கத்தின் நவநாள் தினமும் பி. ப. 3 மணிக்கு பல இடங்களில் கோவில்களிலும் வீடுகளிலும் நடைபெற்று வருகிறது. அருட் செல்வி பௌஸ்ரீனா அவர்களுக்கு விரைவில் முத்திப்பேறு பெற்ற பட்டம் கிடைக்கும் படியும், அவ மூலம் எங்கள் நாட்டுக்குச் சமாதானமும், மக்களுக்கு நிம்மதியான வாழ்வும் கிடைக்கும் படி யாழ். பரிசுத்த மரியன்னை பேராலயத்தில் 25-08-90 காலை 6 15 மணிக்கு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு இறை இரக்கத்தின் செபமாலையும் மன்றாட்டு மாலையும் நடைபெறும்.

படங்கள், புத்தகங்களைப் பெற விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

392, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[14091]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கொலைகளை நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்

## அகில உலக திருச்சபை மன்றத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 23

யாழ்ப்பாணக் குடாநாடு மற்றைய பகுதிகளுடன் சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது. அங்கு நிகழும் கொலைகளை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்''

மேற்கண்ட கோரிக்கை ஜெனிவாவில் இயங்கும் அகில உலக திருச்சபை மன்றத்துக்கு விடுக்கப்பட்டுள்ளது.

மெதடிஸ்த திருச்சபையின் மாமைக் குரு வண. கே.பி. கோவிந்தராஜ் நேரடியாக அகில உலக திருச்சபை மன்றச் செயலாளரிடம் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பிய அவர் தமது விஜயம் பற்றி உதயனுக்கு தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டம் உட்பட தமிழர் வாழும் பகுதிகளில் எல்லாம் குண்டுகள், ஷெல் தாக்குதல்கள் ஸ்ரீலங்கா அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் அப்பாவி தமிழர் கொல்லப்படுகிறார்கள் அவர்கள் உடைமைகள் அழிக்கப்படுகின்றன. இந்த விவரங்களை அகில உலக திருச்சபை மன்றச் செயலாளரிடம் எடுத்துக் கூறினேன். உடனடியாக இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு அவரிடம் தெரிவித்தேன்.

அங்குள்ள பத்திரிகைகளும் எமது செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றி வெளிநாடுகளில் பலரும் அறியாதிருக்கின்றனர். ஒரு குழுவுக்கு எதிராக யுத்தம் நடப்பதாகவே பலர் எண்ணுவதை அவதானிக்க முடிந்தது. அவர்களிடம் உண்மை நிலையை விளக்கினேன்.

இப்படி அவர் கூறினார். (இ-3-5)

# கிளிநொச்சிப் பகுதியில் பதற்றம் கலந்த அமைதி

கிளிநொச்சி, ஆக. 23

கிளிநொச்சியில் தற்போது பதற்றம் கலந்த அமைதி நிலவுகிறது.

வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், வங்கிகள், தபாற்கந்தோர்கள் எதுவும் இயங்குவது இல்லை.

கிளிநொச்சி கச்சேரியின் ஒரு சில பிரிவுகள் ஜெயந்தி நகரில் இயங்கி வருகின்றன.

அதே சமயம் கிளிநொச்சி நகரப்பகுதி, பரவிப் பாஞ்சான், கணேசபுரம் செட்டித் தெரு பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் தற்போது சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

கிளிநொச்சியில் கிராமப் பகுதிகள் வழமைக்குதிரும்பிக் கொண்டிருக்கும் அதேவேளை நகரப்பகுதியில் பதற்றம் கலந்த அமைதி நிலவுகின்றது. (இ-76)

# பெண்மணி பலி

பருத்தித்துறை, ஆக. 23

புலோலி, புற்றளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்) மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சில் பெண்மணி ஒருவர் உயிரிழந்தார் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மரணமானவர் கொழும்பில் வங்கி அதிகாரியாகப்பணிபுரிபவரின் மனைவி ஆவார். இவர் தமது பனங்காணியில்நின்றபோதே குண்டு வீச்சுக்குப் பலியானார்

உயிரிழந்தவர் திருமதி சிவமணி இராசேந்திரம் என்பவர் ஆவார்.

இக் குண்டு வீச்சினால் இரண்டு வீடுகள் முற்றாகச் சேதமுற்றன. மற்றும் ஒரு வீடு சிறிது சேதமடைந்தது. (ஒ-118)

# உதவி அரச அதிபர் பிரிவு எல்லை: இனரீதியாக நிர்ணயிக்க முடிவு

கொழும்பு, ஆக. 23

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் எல்லைகளை மீண்டும் நிர்ணயிக்க உயர் நிலைக் சமிட்டி ஒன்றை பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா நியமித்திருக்கிறார்.

ஜனத்தொகை, பரப்பளவு ஆகியவற்றுடன் இனரீதியாக உதவி அரச அதிபர் பிரிவுகளின் எல்லைகள் வகுக்கப்படவேண்டும்.

என்று அரசு தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [இ-எ]

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பகுதிகளுக்கு மின்சாரம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லாவி, துணுக்காய், வவுனிக்குளம் ஆகிய பகுதிகளுக்கு தற்போது மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஆனால் முல்லைத்தீவு நகரம், முள்ளியவளை, தண்ணீர் ஊற்று, ஒட்டுசுட்டான் பகுதிகள் தொடர்ந்து இருளிலேயே இருந்து வருகின்றன.

இந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் கேபிள்கள் மாங்குள இராணுவ முகாமுக்கு அருகில் சேதம் அடைந்துள்ளன.

இவற்றைத் திருத்துவது தற்போது சாத்தியம் இல்லை என மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ 76)

# வவு., மன்னாரில் அகதி முகாம்கள் நிறுவும் திட்டம் கைவிடப்பட வில்லை

## ரஞ்சன் சொல்கிறார்

கொழும்பு, ஆக. 23

மன்னாரிலும், வவுனியாவிலும் தமிழர்களுக்கெனப் பாரிய முகாம்கள் அமைக்கும் திட்டத்தை அரசு இன்னும் கைவிடவில்லை என்று பாதுகாப்புத் துணைஅமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு வடக்கு - கிழக்கு நிலைமைபற்றி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நேற்று விளக்கினார். அப்போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது அமைச்சர் மேலும் சொன்னதாவது:

வடக்கு - கிழக்கு நிலைமை சீரடைந்தபின்னரே முகாம்களில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படுவர். இந்தமிழ் அகதிகள் வேறுசில குழுக்களால் தாக்கப்படலாம் என்று இராணுவ அதிகாரிகள் கருதுவதால் அவர்கள் அகதிமுகாம்களிலேயே வைத்து பராமரிக்கப்படவேண்டும் என்று அரசுதீர்மானித்துள்ளது.

மன்னாரில் பாரிய அகதி முகாம் ஒன்றை நிறுவிப் பராமரிக்க செஞ்சிலுவைச் சங்கமும் ஐ. நா. அகதிகள் தூதராலயமும் ஆயத்தமாக உள்ளன. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இதற்குச் சம்மதமளிக்கவில்லை.

விரைவில் மன்னாரிலிருந்து விடுதலைப்புலிகள் விரட்டியடிக்கப்படுவர். அதற்குப் பின்னர் மன்னார் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்கமிட்டியிடம் பாரமளிக்கப்படும்.

வவுனியாவிலும் ஒரு பாரிய அகதிமுகாம் அமைக்கப்படும்.

கிராமிய மட்டத்தில் மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ஊர்காவல்படை நிறுவப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரைக் கொலை செய்யவில்லை என்றுமுதலில் மறுப்புத் தெரிவித்த விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பின்னர்ஒப்புக்கொண்டனர்— என்றார். (அ-எ)

# கப்பல்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறக்கச் செல்ல மறுத்துவிட்டனர்.

இது விடயமாக செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கப்பல் கப்டனுக்கு விளக்கிக் கூறினர்.

எனினும் காலை 10-30 மணியளவில் கப்பல் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டது.

இந்தக் கப்பலில் இருந்து ஒரேயொரு தடவை மட்டுமே பொருள்கள் (சுமார் மூன்று லொறி 'லோட்') ''பாதை'' மூலமாக கரைக்குக் கொண்டுவரப்பட்டதாக உணவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். [ஒ-118]

# கிளிநொச்சி மின்சாரசபை: 5 ஊழியர் மட்டும் கடமை

கிளிநொச்சி, ஆக. 23

கிளிநொச்சி மாவட்ட மின்சார விநியோகம் ஊழியர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படும் ஆபத்து உருவாகி வருகிறது.

கிளிநொச்சி மின்சாரசபையில் 23 ஊழியர்கள் கடமை ஆற்றி வந்தனர். ஆனால் இதில் தற்போது 5 ஊழியர்கள் மட்டுமே கடமைக்கு வருகின்றார்கள். ஏனையவர்கள் போர்க்காலச் சூழ் நிலையால் கடமைக்கு வருவதில்லை எனக் கூறப்படுகிறது. (இ - 76)

# வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்க்கிறார் சபாநாயகர்!

கொழும்பு, ஆக, 23

வடக்கு - கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைப்பதை ஏற்கமுடியாது என்று சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச் முஹம்மது தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் தேசிய பேரவை கொழும்பு கலதாரி ஹோட்டலில் கடந்த ஞாயிறு நடத்திய கருத்தரங்கு ஒன்றில் சபாநாயகர் இக் கருத்தை வெளியிட்டார்.

முஸ்லிம் மக்களுக்கு என்று தனியான ஒரு மாகாண சபையை அமைக்கும் திட்டத்தையும் தான் எதிர்ப்பதாக சபாநாயகர் அப்போது தெரிவித்தார்.

வர்த்தக, வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் பேசுகையில் —

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களை முஸ்லிம்களாலும், முஸ்லிம்களை தமிழர்களால் ஒருபோதும் அழித்துவிடமுடியாது என்று குறிப்பிட்டார். (ஒ-எ)

# அமெ. படை வெளியேறாவிடில் ஐ.நா. விலிருந்து லிபியா விலகும்

திரிப்பொலி, ஆக 23

வளைகுடாவில் அமெரிக்கத் துருப்புகள் நிலை கொண்டிருப்பதை ஐ. நா. கண்டிக்க வேண்டும் எனவும் அப்படிச் செய்யத் தவறினால் ஐ. நாவில் இருந்து வெளியேறப் போவதாகவும் லிபியா எச்சரித்துள்ளது.

லிபியத் தலைநகர் திரிப்பொலியில் ஜனாதிபதி கேர்னல் மும்மர் கடாபி செய்தியாளர் மத்தியில் பேசுகையில் இதனை வெளியிட்டார்

குவைத்தில் இருந்து ஈராக் தனது படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும்.

ஈராக், குவைத் நாடுகளில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் வெளியேற பக்தாத் அரசு அனுமதிக்க வேண்டும்.

வளைகுடா நாடுகளிடையே தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கு அந்த நாடுகளே பேசித் தீர்வு காண அனுமதிக்க வேண்டும்.

அமெரிக்கா தனது படைகளை வளைகுடா நாடுகளில் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டும்.

இப்படி ஜனாதிபதி கடாபி மேலும் சொன்னார். [illegible]

# காரைநகரில் இருந்து. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகர்ப்பகுதிமீது 'ஊரடங்கு அறிவித்தல்'பற்றிய துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

அதனையடுத்து ஹெலிக்கொப்டர்களிலும், பொம்மர்களிலுமிருந்து வான்தாக்குதல் நடத்தப்பட -

ஷெல் தாக்குதல்களைநடத்திக்கொண்டு படையினர் முகாமிலிருந்து வெளியேறினர் என்று அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்,

முன்னேறிய இராணுவத்தினர். வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் காரைநகர் டிப்போ பகுதிமுதல் சாந்திபுரம்வரை - பாலாவோடை, விளானை, அழகாபுரி ஆகிய இடங்கள் உட்பட - உள்ளபிரதேசத்தில் நிலைகொண்டிருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

படையினரால் அப் பகுதியிலிருந்து இருபத்து ஐந்துக்கும் அதிகமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

[illegible] வீடுகள் எரிந்து புகை கிளம்புவதை காணக்கூடியதாக இருந்ததாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அப் பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் கற்பூர வியாபாரியான கோபாலன், முன்னர் டிரைவராக பணிபுரிந்த வயோதிபர் குலசேகரம்(வயது 70), முன்னாள் கண்டக்டர் வடிவேலு ஆகியோரும் மற்றும் சிலரும் உயிரிழந்தனர் என்றும் கூறப்பட்டது.

படையினரின் ஷெல் தாக்குதல்களினால் காயமுற்ற பொது மக்கள் மூவர் நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இதேசமயம்—

படையினர் முன்னேறிய பகுதியில் வைத்து வங்கி ஊழியர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் --

படையினர் அவரின் கைகளைக் கட்டி, தாம் முன்னேறிய பகுதியில் உள்ள பல இடங்களுக்கு அவரைத் தம்முடன் கூட்டிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர்ப் பகுதியில் இராணுவ கெடுபிடி அதிகரித்ததை அடுத்து அப்பகுதியிலிருந்த மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி காரைநகர் சிவன் கோயில், மூளாய்ப் பிள்ளையார் கோயில், வழக்கம்பரை அம்மன் கோயில், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி ஆகியவை உட்பட பல்வேறு பொது இடங்களில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

இதேவேளை —

ஊர்காவற்றுறை பகுதியிலும் இராணுவம் தரையிறக்கப்பட்டதாகவும்—

தற்போது பட்டினப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் நேற்றிரவு பிந்திக் கிடைத்த செய்திகள் தரிவித்தன.

ஆனால் இச்செய்தியை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் இடைவழியில்

யாழ்ப்பாணம், ஆக. 23

கொழும்புக்குச் செல்ல யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பயணிகள் வவுனியாவில் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரம் மாவட்டத்தில் ஊரடங்கு அமுலில் உள்ளதாகக் கூறப்பட்டதால் மதவாச்சிக்குச் செல்ல முடியாது பயணிகள் இறம்பைக் குளத்தில் தங்கியுள்ளனர் என்று நேற்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு வருபவர்களை மதவாச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்ல படையினர் அனுமதி வழங்கினார்கள். நேற்றுக் காலை பலர் அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (ஒ-3)

# பீரங்கி கப்பலிலிருந்து வேட்டு

காங்கேசன்துறை, ஆக. 23

பீரங்கிக் கப்பலில் இருந்து நேற்றுக் காலை முதல் வேட்டுகள் தீர்க்கப்பட்டதால் காங்கேசன்துறை, மாதகல் கரையோரப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்தனர்.

பீரங்கி வேட்டுகளுடன் கீரிமலை, காங்கேசன்துறை பகுதிகளில் பொம்மர்கள் குண்டுகளையும் வீசின.

இதனால் சேந்தான்குளம், மாதகல், கீரிமலை பகுதி கரையோர மக்கள் இடம் பெயர்ந்தனர். (இ-3)

## மருதனாமடம் சந்தை சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 23

மருதனாமடம் பொதுச் சந்தைப் பகுதியின் மீதும் நேற்று பொம்மர் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை சந்தை கூடும் நேரத்தில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றது.

இதனால் சந்தை முற்றாகச் சேதமுற்றது. சிலர் காயமுற்றனர். சந்தைக்கு அருகில் இருந்த மாடிக்கட்டடக் கடை ஒன்றும் சேதமடைந்தது.

## ஹெலிக்குப்பலி

பருத்தித்துறையில் இருந்து பரந்தனுக்குப் பொருள்கள் வாங்குவதற்காகச் சைக்கிளில் சென்ற ஒருவர் ஹெலித் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்.

புலோலியைச் சேர்ந்த கே. ஆழ்வாப்பிள்ளை [வயது 54] என்பவரே பலியானவர் ஆவார். [ஒ-118]

## திருநெல்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரன் (வயது 34) ஆகியோரும் மற்றொரு வழிப்போக்கரும் காயமுற்றனர்.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமையக மேல்மாடி போதிய பாதுகாப்பு இல்லை என்று கருதி, மேல்மாடி அலுவலகப் பகுதியை கீழ்மாடிக்கு மாற்றிக் கொண்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குண்டு வீச்சினால் சங்கத்திற்கு பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-143)

## பொம்மர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருதனாமடம், அராலித்துறை, வயாவிளான் ஆகிய பகுதிகள் உட்பட பல இடங்களில் வானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் கூட்டமாக நின்ற சில இடங்களில் பொம்மர்கள் குத்தித், தாழப் பறந்து மக்களை விரட்டும் பாணியில் உறுமிச்சென்றதையும் அவதானிக்க முடிந்தது. [உ-ஒ-3]

## ஹெலி நேற்று...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:-

''உங்கள் பகுதியில் ஊரடங்கு உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது—

''தயவுசெய்து உங்கள் வீடுகளுக்குள்ளேயே இருங்கள் —

''மேலும் உத்தரவுகள் பின்னர் அறிவிக்கப்படும்—

''நன்றி — ஆயுதப் படைகள்.''

துண்டுப் பிரசுரத்தில் திகதியோ, நேரமோ, இடமோ விசேடமாகக் குறிப்பிடப்படவில்லை. பொதுவாகவே உள்ளது.

இதனால் துண்டுப்பிரசுரம் வீசப்படாத இடங்களில் ஊரடங்கு அமுலில் உள்ளதா என்பது குறித்து சந்தேக நிலை உள்ளது.

ஊரடங்கு குறித்து வானொலியிலோ அல்லது தொலைக் காட்சியிலோ எதுவும் அறிவிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருப்பதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இதேவேளை காரைநகர், சங்கானை, சித்தங்கேணிப் பகுதிகளில் மக்களைத் தற்காலிகமாக கோவில்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் பெற்றுக்கொள்ளும்படி கோரும் அறிவித்தல் ஒன்றும் ஹெலியிலிருந்து போடப்பட்டது. (அ)

# கொக்குவிலில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 23

நேற்று மாலை கொக்குவில் ஆடியபாதம் வீதியில் நடத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் தனியார் சிகிச்சை நிலையம் ஒன்று பலத்த சேதமுற்றது. மேலும் பல வீடுகள் சேதமடைந்தன.

சம்பவம் நடைபெற்ற சமயம் வீட்டில் இருந்தவர்கள் பதுங்கு குழியில் தஞ்சம் புகுந்திருந்ததால் உயிர்சேதங்களோ, காயங்களோ இன்றித் தப்பிக் கொண்டனர். (உ)

# முன்னேறும் முயற்சியில் இரண்டு பட்டாலியன்கள்!

## இராணுவ அதிகாரி கூறினார்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் இரண்டு பட்டாலியன்கள், போராளிகளின் நிலைகளை நோக்கி முன்னேறத் தொடங்கியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

மக்கள் குடியிருப்புக்களைத் தவிர்த்து. போராளிகளின் நிலைகளின் மீது விமானத் தாக்குதல் முடுக்கி விட்டிருப்பதாகவும் அந்த இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் மக்கள் நெருக்கமாக வாழும் யாழ். குடாநாட்டுப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களைத் தவிர்த்து விமானத் தாக்குதல் நடத்துவது என்பது சாத்தியமற்றது என்று பி.பி. ஸி. தனது விமர்சனத்தில் குறிப்பிட்டது.

ஊரடங்குச் சட்டம் பற்றிய அறிவித்தல் துண்டுப் பிரசுரமாக மக்கள் குடியிருப்புப் பகுதி மீது வீசப்பட்டதாகவும் இராணுவ அதிகாரி கூறினார்.

ஆனால் ''மக்கள் குடியிருப்புப் பகுதி மீது வீசப்பட்டவை துண்டுப் பிரசுரமா அல்லது குண்டுப் பிரசுரமா? — என்பது தெரியவில்லை''— என்று பி. பி. ஸியின் தமிழோசை தனது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டது. (உ)

## மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து

# பிரெஞ்சு டாக்டர்கள் கொழும்பு திரும்பினர்

பருத்தித்துறை, ஆக. 23

பருத்தித்துறை ஆதார (மந்திகை) ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த பிரெஞ்சு டாக்டர்கள் குழு நேற்றுக்காலை அங்கிருந்து சென்று விட்டது.

எனினும் புதிய குழு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமை ஆஸ்பத்திரியில் பணிபுரிவதற்கு வரும் என நம்பிக்கையாக அறியப்படுகிறது.

இது வரை மந்திகை ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த வைத்தியக் குழுவுக்கு இணைப்பாளராகப் பணிபுரிந்த பெண்மணியின் சிபார்சின் பேரிலேயே டாக்டர்கள் குழுவை கொழும்பில் உள்ள தலைமையகம் அங்கு திரும்பி அழைத்ததாக அறியவருகிறது.

அந்த அழைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை (21 ஆம் திகதி) வந்து சேர்ந்த சில மணி நேரத்தில் புற்றளைப் பகுதியில் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தின.

பிரெஞ்சு டாக்டர்கள் கொழும்பு செல்ல உள்ளது அறிந்து அந்த முடிவை ரத்துச் செய்யுமாறு அப் பகுதி மக்கள் கேட்டனர்.

எனினும் டாக்டர்கள் குழு நேற்றுக் காலை 8-30 மணியளவில், கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட வாகனத்தில் பயணமாகினர்.

எனினும் புதிய குழுவினர் மந்திகை வருவதற்கு வசதியாக செஞ்சிலுவைச் சங்க வாகனத்தை திங்கள் காலை கேரதீவுக்கு அனுப்புமாறு நேற்று நண்பகல் கொழும்பிலிருந்து செய்தி கிடைத்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன. (அ-118)

செய்திச் சாரம்

## தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் கொடி இன்று

காங்கேசன்துறை, ஆக. 23

பிரசித்திபெற்ற தெல்லிப்பளை துர்க்கையம்மன்தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல் 11 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 2 ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் ஆலயச் சுற்றாடல் பகுதியை அமைதிப் பிரதேசமாக்கும் நடைமுறைக்கு ஏற்ப தேவஸ்தானத்தில் நீலக் கொடி பறக்க விடப்பட்டிருக்கிறது. (ஒ-68)

## மா ஏற்றிவர கப்பல்

யாழ்ப்பாணம், ஆக. 23

திருகோணமலை பிரிமா ஆலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மா ஏற்றிவர கப்பல் ஒன்று நேற்று கொழும்பில் இருந்து புறப்பட்டது.

''சிகிரியா'' என்ற அந்தக் கப்பல் பிரிமா ஆலையில் மாவை ஏற்றி ஒரு பகுதியை முல்லைத்தீவில் இறக்கிவிட்டு பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

இந்தக் கப்பலில் 500 தொன் மா வர இருக்கிறது. (இ-3)

## பஸ் சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஆக. 23

ஊரடங்கு உத்தரவை அடுத்து நேற்று பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டன.

முத்திரைச்சந்தி பஸ் நிலையப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-3)

## செம்மணி சென்றோர்மீதும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 23

யாழ்ப்பாணம், செம்மணி சுடலைக்கு கிரியைகள் செய்யச் சென்றவர்கள் மீதும் நேற்று பொம்மர் தாக்குதல் நடத்தியது.

இலக்குகள் தவறியதால் அங்கு நின்றவர்கள் தெய்வாதீனமாகத் தப்பிவிட்டனர். (ஒ)

## விவசாயிகள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 23

தம்பலகமத்தில் இரண்டு தமிழ் விவசாயிகளை இராணுவத்தினர் கைதுசெய்தனர்.

கிருஷ்ணபிள்ளை, கந்தசாமி ஆகிய இருவரும் வயலுக்கு சென்றவேளை கைது செய்யப்பட்டனர். [ஒ-5]

## அரியாலையிலும் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 23

அரியாலை, கண்டி வீதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் பொம்மர் குண்டுத் தாக்குதல் நடத்தியது.

வீதியால் வந்த வாகனம் ஒன்றின் மீது வீசப்பட்ட இந்தக் குண்டு குறி தவறி அப் பகுதியிலுள்ள வீட்டின் மேல் விழுந்ததாகவும், அவ் வீடு சேதமடைந்ததாகவும் அறிய வந்தது. (ஒ)

## மூன்றாவது நாளாக வெளியேற்றம்

சென்னை, ஆக. 23

அ. தி. மு. க வின் இரண்டு அணிகளின் உறுப்பினர்களும் மூன்றாவது தடவையாக நேற்றும் தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் இருந்து சபாநாயகரால் வெளியேற்றப்பட்டனர். (அ-எ)

## தம்பலகமத்தில் அகதிகள் மூவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஆக. 23

தம்பலகமம் அகதி முகாமிலிருந்த 3 தமிழ் மக்களை இராணுவத்தினர் கடந்த சனியன்று கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

இராசையா பாலச்சந்திரன் [98 ஆம் கொலனி], காளியப்பு இராசதுரை [தம்பலகமம்], சபாரத்தினம் குட்டி [கொலனி மேற்கு] கைதானவர்கள் ஆவர். [ஒ-5]

## சாம்பல்தீவில் 20 தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 23

சாம்பல்தீவில் 20 தமிழ் மக்களை இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நிலாவெளி அகதி முகாமிலிருந்து தமது வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்களே கைது செய்யப்பட்டனர். (ஒ-5)

## நோயாளிகள் வெளியேற்றம்

பருத்தித்துறை, ஆக. 23

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளிகள் வெளியேறி வருகின்றனர். [ஒ-118]

# மரண அறிவித்தல்

## சி. சி. க. வாளரசன்

[இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]

கந்தர்மடம் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. சி. சி. க. வாளரசன் அவர்கள் 21-08-1990 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி பூபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், இளைப்பாறிய ஆசிரியை பொன்னார்அம்மாவின் அருமைக் கணவரும், காலம் சென்ற தம்பிப்பிள்ளையின் அருமைச் சகோதரனும், கலாநிதி கோகுலம் [P. H. D., டப்ளின்], புவிராஜகுலம் [B. Sc., வருமான வரி இலாகா, கனடா], தவராஜகுலம் [B. A. Music, இலங்கை வானொலி தமிழ்ப் பகுதி கொன்றோலர்], தவராஜகுலம் [B. Sc., மின் பொறியியலாளர், கனடா], ரவிகுலராஜன் [B. Sc., பொறியியலாளர், அவுஸ்திரேலியா] ஆகியோரின் அருமைத்தந்தையும், பரி [பொறியியலாளர், டப்ளின்], நேசதுரை B.A. [கனடா], முத்துக்குமாரசாமி [வரி மதிப்பாளர், கொழும்பு], சிவசோதி [பொறியியலாளர், கனடா], சந்திராதேவி ஆகியோரின் அருமை மாமனாரும், Dr. ரவிசங்கர் [அமெரிக்கா], ஹரிசங்கர் [பொறியியலாளர், ஜப்பான்], குமரேஸ் [மாணவன், டப்ளின்], செந்தூரன் [மாணவன், கொழும்பு], சுஜீவா [மாணவி, டப்ளின்], முரளிசங்கர், கௌரிசங்கர், விஜிதா ஆகியோரின் அருமைப்பேரனுமாவார்,

அன்னாரது ஈமச்சடங்கு 22-8-90 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

இல. 263, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (14094)

பொன்னார் வாளரசன் [மனைவி]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org